# உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு

(கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

## மானியக் கோரிக்கை எண் . 13

# அறிவிப்புகள்

## 2020 - 2021


இரா. காமராஜ்

உணவு மற்றும் நுகர்பொருள்

வழங்கல் துறை அமைச்சர்

1. உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சென்னை (நகரம்) தெற்கு சரகத்தில் புதியதாக மதுரவாயல் மண்டலம் ஒன்றினை உருவாக்கி உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை உதவி ஆணையாளர் அலுவலகம் 74 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** உணவுப் பொருள் வழங்கல் துறையினால் பொது விநியோகத் திட்டத்தின் மூலம் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் சேவைகளை அவர்களின் வசிப்பிடங்களுக்கு அருகிலேயே நேரடியாக பெறும் வகையில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சென்னை (நகரம்) வடக்கு/தெற்கு சரகங்களில் அம்பத்தூர் மண்டலம், வில்லிவாக்கம் மண்டலம் மற்றும் தி.நகர் மண்டலம் ஆகிய மண்டல அலுவலங்கள் செயல்பட்டு வருகின்றன. பெருகி வரும் மக்கள் தொகையினால் சென்னை புறநகர்ப் பகுதிகள்

அதிவேகமாக விரிவடைந்து வருகின்றன. எனவே, இச்சேவைகள் தொடர்ந்து வழங்கிட மேற்காணும் மண்டலங்களிலிருந்து சில பகுதிகளைப் பிரித்து மொத்தம் **1,31,466** குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்ட **93** நியாய விலைக் கடைகளுடன் புதியதாக “மதுரவாயல் மண்டலம்” ஒன்றினை சென்னை (நகரம்) தெற்கு சரகத்தில் உருவாக்கி உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை உதவி ஆணையாளர் அலுவலகம் **74** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**2. உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலர்கள் மூலம் மாவட்ட அளவில் நுகர்வோர் விழிப்புணர்வு பயிற்சி 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அளிக்கப்படும்.**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** அனைத்து மாவட்டங்களிலும் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலர்கள் வாயிலாக மாவட்ட அளவிலான நுகர்வோர் விழிப்புணர்வு பயிற்சி அளிக்கப்படும். இதற்காக, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சுமார் 500 அலுவலர்களுக்கு மொத்தம் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அண்ணா மேலாண்மை நிலையம் மூலம் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்படும்.

3. **சேமிப்புக் கிடங்குகளுக்கு ஏற்படும் வாடகைச் செலவினத்தை தவிர்க்கும் பொருட்டு 18 இடங்களில் 41,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சொந்த சேமிப்புக் கிடங்குகள் 62.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான மொத்தம் 246 கிடங்குகள் 11.36 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவில் பயன்பாட்டில் உள்ளன. இவைகளின் கொள்ளளவு, தேவைக்கு போதுமானதாக இல்லை என்பதால் 1.51 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளை பல்வேறு நிறுவனங்கள் மற்றும் தனியாரிடமிருந்து வாடகைக்கு எடுத்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் ஒரு கணிசமான அரசு தொகை வாடகைக்கென செலவழிக்கப்படுகிறது. மேலும் எதிர்காலத்திற்கு இருப்பு வைப்பதற்கு தேவைப்படும் கொள்ளளவினை கருத்தில் கொண்டும், மண்டலங்களின் அத்தியாவசியக் கிடங்குத்

தேவையின் அடிப்படையில் கூடுதலாக 41,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகள் 18 இடங்களில் தேவைப்படுகின்றன. எனவே அரசு வாடகை செலவினத்தைக் குறைக்கும் பொருட்டு தனியார் கிடங்குகளுக்கு மாற்றாக 41,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கூடுதல் கிடங்குகளை 18 இடங்களில் 62.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் கட்டப்படும்.

4. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான நவீன அரிசி ஆலைகளில் உற்பத்தி செய்யப்படும் அரிசியில் உள்ள கருப்பு அரிசியை நீக்கும் அதி நவீன இயந்திரம் (5 **MT/Hr Capacity Colour Sortex Machine**) 18.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் தற்போது 15 நவீன புழுங்கல் அரிசி அரவை ஆலைகளும், 6 நவீன பச்சரிசி அரவை ஆலைகளும் ஆக மொத்தம் 21 நவீன அரிசி ஆலைகள் செயல்பட்டு வருகின்றன. பொதுமக்களுக்கு வழங்கப்படும் அரிசியின் தரத்தினை மேலும் உயர்த்துவது அவசியமாகிறது. எனவே, அம்மன்பேட்டை, திருநாகேஸ்வரம், பட்டுக்கோட்டை, திருவாரூர், சுந்தரக்கோட்டை, எருக்கூர் பகுதி–1, எருக்கூர் பகுதி–2, சித்தர்காடு, ஆக்கூர், நெய்வேலி, சிதம்பரம், போளூர், செய்யார்,

மானாமதுரை, கடச்சனேந்தல், தாழையூத்து, பொள்ளாச்சி, திம்மாவரம், அதவத்தூர், கள்ளக்குறிச்சி மற்றும் திருக்கோவிலூர் ஆகிய **21** நவீன அரிசி ஆலைகளில் உற்பத்தி செய்யப்படும் அரிசியில் உள்ள கருப்பு அரிசியை நீக்கி மேலும் தரம் உயர்ந்த அரிசியை பொதுமக்களுக்கு வழங்கிடும் வண்ணம் அரிசியில் உள்ள கருப்பு அரிசியை நீக்கும் அதி நவீன இயந்திரங்கள் **(5 MT/Hr Capacity Colour Sortex Machine)** **21** எண்ணிக்கையில் **18.90** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் நிறுவப்படும்.

5. திறந்தவெளி சேமிப்பு மையங்கள், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், கிடங்குகள் ஆகியவற்றில் சேமிக்கப்படும் உணவு தானியங்களின் ஈரப்பதத்தினை ஆய்வு செய்வதற்கு 200 எண்ணிக்கையிலான ஈரப்பதமானிகள் 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** திறந்தவெளி சேமிப்பு மையங்கள், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், கிடங்குகள் ஆகியவற்றில் சேமிக்கப்படும் உணவு தானியங்களின் ஈரப்பதத்தினை ஆய்வு செய்வதற்கு 200 எண்ணிக்கையிலான ஈரப்பதமானிகள் 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிதியில் கொள்முதல் செய்யப்படும்.

**6. கிடங்குகளில் உணவு தானியப் பொருட்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ள அட்டிகளில் மாலை நேரப் பூச்சிகள் தாக்கத்தினை கட்டுப்படுத்துவதற்கு 1,000 எண்ணிக்கையிலான புற ஊதாக் கதிர் விளக்குப் பொறிகள் 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளில் உணவு தானிய பொருட்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ள அட்டிகளில் உள்ள உணவு தானியங்களை சேதப்படுத்தும் பூச்சிகள் அட்டிகளில் இருந்து மாலை நேரத்தில் வெளி வருவதனை புற ஊதாக் கதிர் விளக்குப் பொறிகள் அதனை ஈர்ப்பதால் பூச்சிகளைக் கட்டுப்படுத்த இயலும். மேலும், பூச்சிக்கொல்லி மருந்துகள் கொள்முதல் செய்வதனை குறைத்து புற ஊதாக் கதிர் விளக்குப் பொறிகள் மூலம் பூச்சிகளை கட்டுக்குள் கொண்டு வருவது அவசியமாகிறது. எனவே, 1,000 எண்ணிக்கையிலான புற ஊதாக் கதிர் விளக்குப் பொறிகள் 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிதியில் கொள்முதல் செய்யப்படும்.

**7. நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல்லை தூற்றி சுத்தம் செய்ய 500 எண்ணிக்கையிலான நெல் தூற்றும் இயந்திரங்கள் 1.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர், அரியலூர், திருச்சி, பெரம்பலூர் மண்டலங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் விவசாயிகளிடம் இருந்து வரும் நெல்லை தூற்றி சுத்தம் செய்து தரமாக கொள்முதல் செய்வதற்கு நெல் தூற்றும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு 500 எண்ணிக்கையிலான நெல் தூற்றும் இயந்திரங்கள் 1.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிதியில் கொள்முதல் செய்யப்படும்.

**8. கிடங்குகள், திறந்தவெளி சேமிப்பு மையங்கள் மற்றும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் உணவு தானியங்களை பாதுகாப்பாக சேமிப்பதற்கும் மற்றும் காற்றோட்டமான வசதி அமைந்திட 50,000 எண்ணிக்கையிலான மூட்டை இடைச்செருகு கட்டைகள் (Poly Pallets) 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சொந்த கிடங்குகள் மற்றும் வாடகைக் கிடங்குகள், திறந்த வெளி சேமிப்பு மையங்கள் மற்றும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் சேமிக்கப்படும் உணவு தானியங்களை தரைக்கும், உணவு தானிய அட்டிகளுக்கும் இடையே மூட்டை இடைச் செருகு கட்டைகள் **(Poly Pallets)** ஈரக்காப்பு மரக்கூளங்களாக **(Dunnage)** பயன்படுத்தும் போது சிறந்த காற்றோட்ட வசதிக்கும்,

உணவு தானிய பொருட்கள் தரம் குறையாமல் சேமிப்பதற்கும் வழிவகை செய்கிறது. எனவே, 50,000 எண்ணிக்கையிலான மூட்டை இடைச்செருகு கட்டைகள் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிதியில் கொள்முதல் செய்யப்படும்.

9. சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமாக உயர் தொழில் நுட்பத்துடன் தினசரி 100 மெட்ரிக் டன் அரவைத் திறனுடன் கூடிய புதிய நவீன அரிசி ஆலை 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 15 நவீன புழுங்கல் அரிசி அரவை ஆலைகளும், 6 நவீன பச்சரிசி அரவை ஆலைகளும் ஆக மொத்தம் 21 நவீன அரிசி ஆலைகள் செயல்பட்டு வருகின்றன. இவை அனைத்திலும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலமாக பெறப்பட்ட நெல்லினை பொது விநியோகத் திட்டத்திற்காக அரவை செய்யப்படுகிறது. விவசாயிகளின் நலன் கருதி கொள்முதல் செய்யப்படும் நெல்லினை உடனடியாக அரவை செய்திட ஏதுவாக கூடுதலாக ஒரு நவீன அரிசி ஆலை நிறுவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே, சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டத்தில் உயர் தொழில் நுட்பத்துடன் கூடிய நவீன இயந்திரங்களைக் கொண்டு தினசரி 100 மெட்ரிக் டன் அரவைத் திறனுடன் கூடிய புதிய நவீன அரிசி ஆலை 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் நிறுவப்படும்.

10. தேனி மற்றும் மேட்டுப்பாளையம் ஆகிய இடங்களில் விளை பொருட்களான காய்கறிகள், புளி, பழங்கள், தானியங்கள் மற்றும் பூக்கள் ஆகியவற்றை சூரிய ஒளி பயன்பாட்டுடன் குளிர்சாதன முறையில் சேமித்திட 500 மெட்ரிக் டன் கொள்ளளவில் தலா ரூபாய் 2.5 கோடி வீதம் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குளிர் பதனக் கிடங்குகள் கட்டப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தில் தேனி மற்றும் மேட்டுப்பாளையம் ஆகிய இரண்டு இடங்களில் விளையும் பொருட்களான காய்கறிகள், புளி, பழங்கள், தானியங்கள் மற்றும் பூக்கள் ஆகியவற்றை சூரிய ஒளி பயன்பாட்டுடன் குளிர்சாதன முறையில் சேமித்திட 500 மெட்ரிக் டன் கொள்ளளவு திறன் கொண்ட குளிர் பதனக் கிடங்குகளை ஒவ்வொன்றும் தலா ரூபாய் 2.50 கோடி வீதம் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன நிதியினைக் கொண்டு நிறுவப்படும்.

11. அம்பாசமுத்திரம் மற்றும் வத்தலகுண்டு ஆகிய சேமிப்புக் கிடங்குகளில் 60 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட இரண்டு எடைமேடைகளை 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தில் அம்பாசமுத்திரம் மற்றும் வத்தலகுண்டு ஆகிய சேமிப்புக் கிடங்குகளில் 60 மெட்ரிக் டன் திறன் கொண்ட முற்றிலும் மின்னணுமயமாக்கப்பட்ட இரண்டு எடைமேடைகள் 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் நிதியிலிருந்து அமைக்கப்படும்.

12. இந்திய உணவுக் கழகத்தின் உணவு தானியங்களை சிறந்த முறையில் பராமரித்திடும் பொருட்டு தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனமானது 15,000 எண்ணிக்கையிலான மூட்டை இடைச்செருகு கட்டைகள் **(Poly Pallets)** 4.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பல்வேறு சேமிப்புக் கிடங்குகளில் உபயோகிக்கப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் கிடங்குகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ள இந்திய உணவுக் கழக உணவு தானியங்களை விஞ்ஞான முறைப்படி பராமரிக்க அனைத்து சேமிப்புக் கிடங்குகளிலும் 15,000 எண்ணிக்கையிலான மூட்டை இடைச்செருகு கட்டைகள் **(Poly Pallets)** தலா ரூபாய் 3,000 வீதம் 4.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன நிதியிலிருந்து கொள்முதல் செய்யப்படும்.

13. குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலானய்வுத் துறை சென்னை அலகினை 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சென்னை வடக்கு மற்றும் சென்னை தெற்கு என இரண்டு அலகுகளாக பிரிக்கப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை, சென்னை அலகு குறைந்த எண்ணிக்கையிலான 13 காவல் ஆளினர்களைக் (Police Personnel) கொண்டு இயங்கி வருகிறது. தற்போது தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணிகளிலிருந்து காவல் ஆளினர்கள் அயல் பணியில் பெறப்பட்டு ரயில் மூலம் கடத்தப்படும் பொது விநியோகத் திட்ட அரிசியை கைப்பற்றி கடத்தல் நபர்களை கைது செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, துணை ஆணையாளர் (நகரம்), வடக்கு மற்றும் தெற்கு

அவர்களால் வரையறுக்கப்பட்ட எல்லையைக் கொண்டு பரந்து விரிந்த சென்னை அலகின் எல்லையைக் கண்காணிக்கும் பொருட்டு தற்போது இயங்கி வரும் சென்னை அலகினை 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வடசென்னை மற்றும் தென்சென்னை என இரண்டு அலகுகளாக பிரிக்கப்படும்.

**14. குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையின் 6 அலகுகளுக்கு 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்படும்.**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** வேலூர், திருவாரூர், பொள்ளாச்சி, உத்தமபாளையம், கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் ஆகிய **6** குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையின் அலகுகளுக்கு சொந்தமாக புதிய கட்டடம் **6** கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**15. குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலானய்வுத் துறை மதுரை மண்டலம், காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்படும்.**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் மதுரை மண்டலம் குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலானய்வுத் துறை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சொந்த அலுவலகக் கட்டடம் கட்டப்படும்.

**இரா. காமராஜ்**
உணவு மற்றும் நுகர்பொருள்
வழங்கல் துறை அமைச்சர்

# நன்றி!